**ஹொரண பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 13 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 ஆகஸ்ட் 18 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹொரண பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இருப்பு பெறுமதியாக பௌதீக இருப்பு கணக்கீடு செய்வதற்கு பதிலாக ரூபா 5,896,590 தொகையான புத்தக பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 திசெம்பர் 31 ஆம் திகதி முதல் பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொள்ளப்பட்ட திகதி வரை பொருள் மெய்மெய்யாய்வில் பெறப்பட்ட பௌதீக இருப்பு அளவு களஞ்சிய புத்தகங்களின் இருப்புடன் சமமாக இருந்ததை அறியத்தருகின்றோம். |

#### (ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 93,141,222 தொகையான 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் | உரிய மீதிகளின் வேறுபாடுகளை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை | 2020 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | |
|---|---|---|
| காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 56,639,478 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | எடுக்கப்பட வேண்டும். | |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, இருப்பு பதிவேடு மற்றும் பட்டோலைகள் காணப்படாமையினால் ரூபா 150,473,604 கூட்டுத் தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது இறுதிக் கணக்கில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | - | | | |
| (i) | 21 ஆம் பிரிவு | 69,632,331 | கிராம சேவகர் பிரிவின் பிரகாரம் சபைக்குரிய ஒட்டு மொத்த வீதிகளின் அளவும் அதன் தன்மையும் இனங்காணப்பட்டு பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை வேண்டும். | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | 38 ஆம் பிரிவு | | வீதியை பராமரித்தலுக்காக பராமரிப்பு திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதற்குரிய நிதி ஏற்பாடு வருடாந்த பாதீட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iii) | 134(1) ஆம் பிரிவு | | ஆதன வரிக்காக புதிய இனங்காணல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (iv) | 160 ஆம் பிரிவு | - | நிலுவை ஆதன வரியை அறவிடுவதலின் இறுதிக் கட்டமாக ஆதனங்கள் தடை செய்யப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | | சபைக்குச் சொந்தமான காணிகள் தொடர்பான மெய்மெய்யாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் விதியின் பிரகாரம் நடவடிக்கை வேண்டும். | மெய்மெய்யாய்வு சபை நிர்ணயிக்கப்பட்டு எதிர் காலத்தில் சபைக்குச் சொந்தமான காணிகளை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (இ) | 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல். | - | 05 நிறுவனங்களின் காலாவதியான சுற்றாடல் அனுமதிப் பத்திரத்திற்காக புதிய சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் நடவடிக்கை வேண்டும். | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறாத நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |

### 1.4.2 வரி தேவைப்பாடுகளுடன் இணங்காமை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெறுமதி சேர் வரி சட்டத்தின் கீழ் 2002 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய ரூபா 2,084,385 பெறுமதி சேர் வரி அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி சேர் வரி வருமானம் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்தப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது என அறியத்தருகின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,933,277 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 28,069,033 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 23,993,708 | 18,297,519 | 22,944,788 | 3,716,209 | 16,486,494 | 11,769,297 | 15,885,487 | 2,842,981 |
| (ii) | வாடகை | 3,522,000 | 2,518,430 | 3,665,016 | 226,530 | 4,263,000 | 2,388,532 | 1,747,744 | 201700 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,549,900 | 1,953,538 | 2,912,101 | - | 1,613,500 | 1,219,626 | 1,656,638 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 107,793,506 | 94,211,000 | 78,471,697 | - | 85,531,100 | 65,000,000 | 107,531,597 | 40,603,906 |
| | | 136,859,114 | 116,980,487 | 107,993,602 | 3,942,739 | 107,894,094 | 80,377,455 | 126,821,466 | 43,648,587 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆதன வரி காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ஆதன வரி அலகுகள் 111 இல் இருந்து ரூபா 264,968 தொகையும், 10 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ஆதன வரி அலகுகள் 93 இல் இருந்து ரூபா 204,425 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதன வரி அறவிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

### 2.2.3 நீதிமன்ற தண்டப் பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதம செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 15,000,000 ஆகும். | நிலுவை நீதிமன்ற தண்டப் பணம் அறவிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்குரிய கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணத்திற்காக பட்டோலைகள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதுடன், மிகை சிட்டையிடல்களுக்காக சீராக்கப்பட்ட பணம் கிடைத்த பின்னர் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) உப விதிகள் | | |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 16 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 | உப விதிகள் விதிக்கப்படாதிருந்த விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட | எதிர்காலத்தில் விதிக்கப்படாதுள்ள உப விதிகளை விதித்துக் கொள்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையினால் 04 பிரதான விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | வேண்டும். | எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டம் | | |
| (i) | 2019 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயற்பாடுகளில் செயல் முன்னேற்றத்தை அளவிடும் முறைமையொன்று காணப்படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளின் செயல் முன்னேற்றத்தை அளவீடு செய்யும் முறைமையொன்று ஏற்படுத்தப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயற்பாடுகளின் செயல் முன்னேற்றத்தை அளவிடும் முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (ii) | மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 79 நிர்மாண செயற்திட்டங்களுக்கு முன்னுரிமையின் பிரகாரம் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாமல் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு புறம்பாக ரூபா 23,184,718 கிரயமான 72 வீதி செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற் திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டு முதல் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றது என அறியத்தருகின்றோம். |
| (ஆ) | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு | | |
| | வறுமையை ஒழிப்பதற்கான நோக்கமாக மாவக் ஓயா அருகில் பல்நோக்கு சேவை வியாபார நிலைமொன்றை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டதுடன், ஏனைய எந்த பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாவக் ஓயா அருகில் உள்ள பல்நோக்கு சேவை வியாபார நிலையத்தை நிர்மாணித்தல் விரைவாக மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை | | |
| (i) 12 பதவிகளுக்குரிய 19 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அபிவிருத்தி உத்தியோகத்தர், நூலகர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், வருமான பரிசோதகரை சேர்ப்பது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கென்று விசாரணையில் காணப்படுவதுடன், ஏனைய பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் கைவிடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். |
| (ii) ஆரம்ப நிலையில் 05 பதவிகளுக்காக 28 ஊழியர்கள் அங்கீகாரம் இன்றி நாட் கூலி அடிப்படையில் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 6,347,759 தொகையொன்று சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | நாட் கூலி அடிப்படையில் சேர்க்கும் போது உரிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | தற்போது சேவையில் இருக்கின்ற ஊழியர்கள் போதியளவானதாக இல்லாமையினால் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |
| (iii) சபையில் சேவையாற்றுகின்ற 45 கனிஷ்ட ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு 05 வருடங்களாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் 07 ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு 04 வருடங்களாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள ஊழியர்களுக்கு குறித்துரைத்த திகதிகளில் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும். | சகல ஊழியர்களினதும் சம்பள அதிகரிப்பு 2020 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |
| (ஆ) ஊழியர் கடன் | | |
| சேவையை விட்டுச் சென்ற மற்றும் மரணமடைந்த 06 உத்தியோகத்தர்களிடம் இருந்து 2014 ஆம் ஆண்டு முதல் அறவிடுவதற்கு காணப்பட்ட கடன் மீதி ரூபா 18,700 ஆகும். | நிலுவை கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிறுவனத்திற்கு சொந்தமான டுப்லோ இயந்திரம் நீண்ட காலம் முதல் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டது. | பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | டுப்லோ இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

**3.5 வாகனப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 02 வாகனங்களின் பதிவுப் புத்தகம் காணாமல் போயிருந்ததுடன், இறுதி தடவையான வருமான அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட வருடத்தை கண்டறிவதற்கு முடியாதிருந்தது. | சபைக்குச் சொந்தமான வாகனங்கள் வருடாந்தம் பதிவு செய்யப்பட வேண்டும். | சபையின் பெயரில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். |